

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.11.2023) சென்னை, மயிலாப்பூர், கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் 1,100 மணமக்களுக்கு திருமணம் நடத்தி வைக்கும் நிகழ்வை நிறைவு செய்திடும் விதமாக, இரண்டு மணமக்களுக்கு திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ. கருணாநிதி, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.11.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ஒருகால பூஜைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் / மகள்களின் மேற்படிப்பிற்கு உயர்கல்வித் தொகையினை 400 மாணவர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 8 மாணவர்களுக்கு அதற்கான வங்கி வரைவோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### உங்கள் ஆட்சியில்

# இந்து சமய அறநிலையத் துறை மிகச் சிறப்பாக செயல்படுகிறது!

## நடைப் பயிற்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் ஓய்வு பெற்ற வங்கி உயரதிகாரி கருத்து! பெருமிதம்!



சென்னை, நவ. 25 - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காலையில் அடையாறில் நடைபயிற்சி சென்று கொண்டு இருந்தபோது அப்பகுதியைச் சேர்ந்த பெரியவர் - கனரா வங்கியின் ஓய்வு பெற்ற உதவி பொதுமேலாளர் - ஏ. வெங்கட்ராமன் அவர்கள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை வழியில் சந்தித்தார்.

அப்போது அவர் முதல்வர் அவர்களிடம், “சார், ஒரு நிமிடம்! என்னுடைய கருத்தைக் கூறலாமா?” என்று வினவினார்.

உடனே முதல்வர் அவர்களும் “சொல்லுங்கள்” என்றார்.

உடனே அடையாறு காந்திநகர் மெயின் ரோடு எண் 7-ல் வசிக்கும் கனரா வங்கியின் ஓய்வுபெற்ற உதவி பொதுமேலாளர் ஏ.வெங்கட்ராமன் அவர்கள் தனது கருத்தைக் கூறியதாவது:-

“ரொம்ப பிரமாதமா இருக்குசார் உங்கள் நிர்வாகம். சிலர் சொல்றாங்க, நீங்க டெம்பிளுக்கு ஒண்ணும் பண்றதில்லைன்னு. ஆனால் உங்க அட்வைஸ்ல சேகர்பாபு அழகா பண்ணி - அதுக்கு இன்கம் லாம் வரவைக்கிறார். இந்து சமய அறநிலையத்துறை மிகச்சிறப்பாக செயல்படுகின்றது. இதனை நான் மட்டும் சொல்லவில்லை. எல்லோரும் சொல்கிறார்கள்.

உங்களுடைய ஆட்சியில் அமைச்சராக இருக்கும் சேகர்பாபு கோயிலுக்கு வருமானத்தை அதிகரித்து இருக்கிறார். கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை யாரோ ஆக்கிரமித்து வைத்து இருக்கிறார்கள். அதனை எல்லாம் மீட்டுக் கொடுத்து இருக்கிறார். இந்த மாதிரி எல்லாம் யாரும் இதுவரை செய்ததில்லை.

**முதல்வர் மு.க. ஸ்டாலின்:** ஆமாம், ஆமாம். இன்றைக்கு அமைச்சர் சேகர்பாபு ஒரு பேட்டியில் கூட இதற்கான பதிலை நன்றாக கூறி இருக்கிறார்.

**அடையாறு ஏ.வெங்கட்ராமன்:** கோவிலில் நிறைய நடக்கிறது. குறிப்பாக கும்பாபிஷேகம் அதிகமாக நடைபெறுகின்றது. முன்பெல்லாம் கும்பாபிஷேகமே கிடையாது 10 வருசமா. இப்போது ஆயிரம் கும்பாபி ஷேகங்கள் நடைபெற்று ஆயிரத்து ஓராவது கும்பாபிஷேகம் நடைபெற இருக்கின்றது. நமஸ்காரம்!

இவ்வாறு கனரா வங்கியின் ஓய்வு பெற்ற உதவி பொது மேலாளர் ஏ.வெங்கட்ராமன் உரையாடினார். அதுபோது அமைச்சர் மா.சுப்பிரமணியன் உடனிருந்தார்.

### ரூ.50 ஆயிரம் மதிப்பில் சீர்வரிசைகள்

# திருக்கோயில்கள் சார்பில் 1100 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைப்பு!

## சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நடத்தி வைத்தார்!

சென்னை, நவ. 25- திருக்கோயில்கள் சார்பில் 1,100 மணமக்களுக்கு திருமணம் நடத்தி வைக்கும் நிகழ்வை நிறைவு செய்திடும் விதமாக, இரண்டு மணமக்களுக்கான திருமணத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.11.2023) சென்னை, மயிலாப்பூர், கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறை திருக்கோயில்கள் சார்பில் 1,100 மணமக்களுக்கு திருமணம் நடத்தி வைக்கும் நிகழ்வை நிறைவு செய்திடும் விதமாக, இரண்டு மணமக்களுக்கான திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களுக்கு சீர் வரிசைப் பொருட்களை வழங்கினார்.

**1,100 மணமக்களுக்கு திருமணம் நடத்தி வைத்தல்**

2022-2023 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கையில், “ஒரு இணை ஆணையர் மண்டலத்திற்கு 25 இணைகள் வீதம் 20 மண்டலங்களில் ஆண்டுதோறும் 500 இணைகளுக்கு திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்தப்படும். இதற்கான செலவினத்தைத் திருக்கோயில்களே ஏற்கும்“ என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சென்னை, திருவான்மியூர், மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில் 4.12.2022 அன்று சென்னை இணை ஆணையர் மண்டலத்திற்குட்பட்ட திருக்கோயில்கள் சார்பில் 25 மணமக்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைத்து சீர் வரிசைப் பொருட்களை வழங்கினார். அதனைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் மொத்தம் 500 மணமக்களுக்கு திருக்கோயில்கள் சார்பில் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன. மேலும், திருக்கோயில்கள் மூலம் நடத்தப்படும் திருமணத்திற்கு அனுமதிக்கப்பட்ட திட்டச் செலவினத் தொகையை 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

2023-2024 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கையில், “பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் பொன் தாலி உட்பட ரூ.50,000/ மதிப்பில் சீர் வரிசைகள் வழங்கி திருமண விழா நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு 500 இணைகளுக்கு திருக்கோயில் சார்பில் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. இவ்வாண்டு கூடுதலாக மேலும் 100 இணைகளைச் சேர்த்து ஒரு மண்டலத்திற்கு 30 இணைகள் வீதம் 600 இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக திருமண விழா நடத்தி வைக்கப்படும்” என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, முதற்கட்டமாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 7.7.2023 அன்று சென்னை, கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், 34 மணமக்களுக்கு திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து சென்னையில் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையிலும், பிற மாவட்டங்களிலும் திருக்கோயில்கள் சார்பில் திருமணங்கள் நடத்தப்பட்டன.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை 2022 - 2023 ஆம் நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட 500 திருமணங்களும், 2023 - 2024 ஆம் நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட 600 திருமணங்களில் 564 திருமணங்களும், ஆகமொத்தம் 1,064 திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினம் திருக்கோயில்கள் சார்பில் பிற மாவட்டங்களில் 34 மணமக்களுக்கும், சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 2 மணமக்களுக்கும் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டு மொத்தம் 1,100 திருமணங்கள் நிறைவு பெற்றுள்ளன.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ. கருணாநிதி, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வேலூரில் இன்று பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல்

# கலைஞர் நூற்றாண்டு விழா!

## கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் தலைமை வகித்து சிறப்பு மலரை வெளியிடுகிறார்!

சென்னை, நவ. 25 - பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா இன்று (25.11.2023 - சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு வேலூர் மாநகர் - பேபி மகாலில் நடைபெறுகிறது. இதில் கலைஞர் நூற்றாண்டு விழாவின் அங்கமாக “பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் - கலைஞர்” என்ற சிறப்பு மலரினை நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் வெளியிட்டு விழாப் பேருரை யாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சியர் பெ.குமாரவேல் பாண்டியன் வரவேற்றிட, நீர்வளத் துறைச் செயலாளர் சந்தீப் சக்சேனா விழா நோக்கவுரை யாற்றுகிறார்.

கழகப் பொதுச் செயலாளர் - நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சிறப்பு மலரை வெளியிட்டு தலைமையுரையாற்றுகிறார்.

வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் முன்னிலை வகித்துப் பேசுகின்றனர். கைத்தறி - துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி சிறப்புரையாற்றுகிறார்.

து.மு.கதிர் ஆனந்த் எம்.பி., சி.என். அண்ணாதுரை எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் வி.அமலுவிஜயன், எம். ஜெகன்மூர்த்தி, ஜெ.எல்.ஈஸ்வரப்பன், ஏ.எம்.முனிரத்தினம், சு.இரவி, க.தேவராஜி, அ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன், கோ.செந்தில்குமார், மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் மு.பாபு , துணை மேயர் மா.சுனில்குமார் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

நீர்வளத்துறை முதன்மை தலைமை பொறியாளர் கு.அசோகன் நன்றி கூறுகிறார்.

**கலைஞர் நூற்றாண்டு விழா நினைவு புகைப்படக் கண்காட்சி!**

அன்று காலை 10 மணிக்கு வேலூர் டவுன் ஹாலில் புகைப்படக் கலைஞர் கோவை சுப்பு ஏற்பாட்டில் கலைஞர் நூற்றாண்டு விழா நினைவு புகைப்படக் கண்காட்சியினை கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் திறந்து வைக்கிறார்.

பிற்பகல் 3 மணிக்கு திருச்சி கலைக் காவேரி கலைக்குழுவினரின் கலை நிகழ்ச்சி பேபி மஹாலில் நடைபெறுகிறது.

மாலை 6 மணிக்கு பேபி ஹாலில் “முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நிலைத்த புகழுக்குப் பெரிதும் காரணம் ‘இலக்கியப் பணியா?’, ‘சமுதாயப் பணியா?’ எனும் பட்டிமன்றம் நடைபெறுகிறது. இப்பட்டிமன்றத்தை எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. துவக்கி வைத்து பேசுகிறார். ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நகைச்சுவை நாவலர் புலவர் மா.இராமலிங்கம் பட்டிமன்றத்திற்கு நடுவராக பங்கேற்கிறார்.

இலக்கியப் பணியே என்ற தலைப்பில் முனைவர் இரா.நவஜோதி (குறிஞ்சிப்பாடி), பட்டுக்கோட்டை பி.பாஸ்கர், திருச்சி அன்னலெட்சுமி ஆகியோரும், சமுதாயப் பணியே என்ற தலைப்பில் சேலம் முனைவர் அபு, மணப்பாறை கவிஞர் லலிதா, திருத்தணி வேதநாயகி ஆகியோர் பேசுகின்றனர்.

பகுத்தறிவு சீர்திருத்தச் செம்மல் - கலைஞர் குழு உறுப்பினர்கள் நீதியரசர் கே.சந்துரு, எ.எஸ்.குமாரி, சுந்தர ஆவுடையப்பன், வே.மதிமாறன், வாலாசா வல்லவன், சூர்யா சேவியர், செந்தலை கவுதமன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இதில் மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர், மாவட்ட,ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.




திருவண்ணாமலை நகர தி.மு.க. சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நலஉதவிகள் வழங்கும் விழாவில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நலஉதவிகள் வழங்கினார். உடன் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை, இரா. ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.



கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி நேற்று முன்தினம் (23.11.2023) மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் இராணிப்பேட்டை மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் 12 ஆம் வகுப்பில் படிக்கும் மாணவ – மாணவிகளிடையே மாவட்ட அளவில் நடத்தப்பட்ட பயிற்சித் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 40 மாணவ – மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் போட்டித் தேர்வுகளில் (NEET, JEE) களுக்கு தயார் செய்து வெற்றி பெற உதவியாக பாடப்பிரிவுகள் உள்ளடக்கிய சிறப்பு செயலிகள் பதிவு செய்யப்பட்ட கையடக்க கணினி (TAB) சமூக பங்களிப்பு நிதியிலிருந்து வாங்கப்பட்டதை மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ச.வளர்மதி, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.உஷா, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி.ஜெயந்தி திருமூர்த்தி, நகர மன்றத் தலைவர் திருமதி.சுஜாதாவினோத், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.மனோன்மணி, சாப்ட் சோர்ஸ் டெக்னாலஜி அப்துல்மஜித் மற்றும் ஆசிரியர்கள் மாணவ, மாணவிகள் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

## இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் 2–வது மாநில மாநாடு வரும் டிசம்பர் 17–ஆம் தேதி சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில் நடைபெற உள்ளது. இந்த மாநில மாநாட்டுக்காக முன்னெடுக்க வேண்டிய பணிகள் குறித்து, மாவட்ட– மாநகர– மாநில அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வரும் 26–11–2023 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணி அளவில், சென்னை, அன்பகத்தில் இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தக் கூட்டத்தில் இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**அன்பகம்**
சென்னை – 18.
நாள் : 23–11–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி